அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பு!

# தமிழ்நாட்டில் - திராவிட மாடல் அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு - சாதனைகள்!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கவுரை!

**பாஸ்டன், ஜூலை 10-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சாதனைகளை எடுத்துரைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் விளக்கவுரை ஆற்றினார்.**

ஹார்வர்ட் பல்கலையில் அவர் ஆற்றிய உரை வருமாறு :-

அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசின் சீர்மிகு மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சாதனைகள் குறித்து உரையாற்ற வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவத் துறையில் தமிழ்நாடு சிறப்பான சாதனைகள் செய்து, சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதில் சிறந்து விளங்குகிறது. 1923 இல் தொடங்கப்பட்ட பொது சுகாதார அமைப்பின் மூலம் முன்னோடியாக பல்வேறு பொது சுகாதார திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள் ளது.

தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. ஏழை எளியோர்களுக்காக 23.07.2009 அன்று காப்பீடு திட்டத்தை தொடங்கியவர் 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த திட்டம் "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டமாக" கடந்த 3 ஆண்டுகளில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டம் தொடங்கிய நாள் முதல் ஜூன் 2024 வரை ரூ.136.25 பில்லியன் செலவில், 14 மில்லியன் மக்கள் பயன்பெற்றுள்ளனர். மொத்தப் பயனாளிகளில், 4.32 மில்லியன் மக்கள் அரசு மருத்துவ மனைகளில் ரூ.49.45 பில்லியன் செலவில் உயர்சிகிச்சைகள் பெற்றுள்ளனர். மேலும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முன்னெச்சரிக்கை நோக்கத்துடனும் தொலைநோக்கு பார்வையுடன் 1999 ஆம் ஆண்டு கொண்டுவந்த மற்றொரு திட்டம் "வருமுன் காப்போம் திட்டமாகும்". இதன்மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு விரிவான சுகாதார பரிசோதனை, சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

1,353 அவசர ஊர்திகளுடன் 15.09.2008 அன்று 108 அவசரகால பராமரிப்பு சேவை திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் எந்த இடத்தில் இருந்தாலும், அவசர ஊர்தி சேவை மையத்தை தொடர்பு கொண்ட பிறகு 11 நிமிடங்கள் 23 வினாடிகளுக்குள் அவசர ஊர்தி அந்த இடத்திற்கு சென்றடையும் வகையில் மிகச் சிறப்பாக இந்த திட்டம் செயல்பட்டு வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கண் பார்வை குறைபாடுகளை கண்டறிய 2009 ஆம் ஆண்டு "கண்ணொளி காப்போம் திட்டம்" தொடங்கப்பட்டது. இன்றுவரை, மொத்தம் 4.25 மில்லியன் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு, 2.7 இலட்சம் மாணவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகனும், தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுமையான திட்டங்கள் மூலம், தனது தீவிர உழைப்பாலும், அர்ப்பணிப்பாலும் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அனைத்து சாலை போக்குவரத்து விபத்துக்களுக்கும் இலவச அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம்" 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் 18.12.2023 முதல் 31.05.2024 வரை, ரூ.2.21 பில்லியன் செலவில் 2,52,981 நோயாளிகள் கட்டணமில்லா சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இதில் மொத்த பயனாளிகளில் 2,33,039 நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்", செப்டம்பர் 29, 2021 அன்று சேலத்தில் உள்ள வாழப்பாடியில் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 25 வகையான பரிசோதனைகளை, 17 சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 202324 வரை மொத்தம் 36,69,326 பேர் பயனடைந்துள்ளனர். ஆய்வக மாதிரிகளைக் கொண்டு செல்வதற்கான "மக்களைத் தேடி ஆய்வகம் திட்டம்" (Hub and Spoke Model) பிப்ரவரி 5, 2024 அன்று 755 ஹப்கள் மற்றும் 2,427 ஸ்போக்குகளை உள்ளடக்கியதாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 216 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஜூன் 2024 வரை, 2,27,000 மாதிரிகள் திறம்பட கொண்டு செல்லப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இதய பாதிப்புகளை கண்டறிந்து சிகிச்சை வழங்கும் நோக்கில் "இதயம் காப்போம் திட்டம்" 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. ஜூன் 2023 மற்றும் ஜூன் 2024 க்கு இடையில், சந்தேகத்திற்கிடமான இதயநோய் அறிகுறிகளுடன் மொத்தம் 8,500 நோயாளிகளுக்கு அவசர மாரடைப்பு மருந்துகள் (Loading Dose) வழங்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரைக்கப்பட்டு, அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

**சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம்!**

அதேபோல் "சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம்" 10.07.2023 அன்று சேலம் மாவட்டம், காடையாம்பட்டியில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 4,60,000 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு, 3,361 நோயாளிகள் நாள்பட்ட சிறுநீரக நோய்களுக்கு சந்தேகிக்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் "தொழிலாளரை தேடி மருத்துவம் எனும் திட்டம்" 09.01.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூரில் உள்ள Hyundai Mobis தொழிற்சாலையில் தொடங்கப்பட்டது. அந்த திட்டத்தின் மூலம் இதுவரை 486 தொழிற்சாலைகளில் 2,96,652 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 26,471 பேருக்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள் ளது.

2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இறந்தவர்களிடம் இருந்து உடல் உறுப்புகளை தானமாக பெற்று "உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திட்டம்" தொடங்கப்பட்டது. இதன் மூலம் இதுவரை இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கணையம், சிறுகுடல், வயிறு, கைகள் என மொத்தம் 7,783 உறுப்புகள், 3,950 சிறிய உறுப்புகள் மற்றும் திசுக்கள் தானமாக பெறப்பட்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில், அதிக எண்ணிக்கை யிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்வதில் தமிழ்நாடு தொடர்ந்து தேசிய அளவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்று 23.09.2023 அன்று அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு இதுவரை 200 உடல்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள் ளது.

**மக்களைத் தேடி மருத்துவம்!**

கோவிட்19 தொற்று நோய்க்கு பிந்தைய பாதிப்புகளில் இருந்தும் மக்களுக்கு தேவையான மருத்து வம் அவர்களை சென்றடையும் நோக்கில், "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.08.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, முதல் பயனாளியான கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் உள்ள திருமதி.சரோஜம் மாளுக்கு மருந்து பெட்டகங்கள் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயஉதவி குழுவிலிருந்து பெண் சுகாதார தன்னார்வலர்களின் (WHVs) மருத்துவத் துறையுடன் இணைந்து மக்களுக்கு தேவையான மருந்துகளை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கி வருகின்றனர். கிராமப்புறங்களில் 8,713 மற்றும் நகர்ப்புறங்களில் 2,256 பேர் என்று மொத்தம் 10,969 பேர் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு WHV களால் வீட்டிற்கே சென்று மருந்து பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 463 பிளாக்குகளில் ஒரு செவிலியர் ஒரு பிசியோதெரபிஸ்ட் அடங்கிய குழுக்கள் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுநீரக நோயாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று CAPD பைகளை செவிலியர்களை கொண்டு வழங்கும் திட்டமும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் மருத்துவமனைக்கு சென்று ஹீமோடையாலிசிஸ் மேற்கொள்ளும் நடைமுறை தவிர்க்கப்படுகிறது.

மருத்துவச் சேவைகள் மலிவாக கிடைக்கக்கூடிய, அணுகக்கூடியதாக மாற்றுவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள் அனைவருக்கும் கிடைக்கும் நிலை ஏற்படும். தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அதிக சமபங்கு, சமூக உள்ளடக்கம் மற்றும் சமூகப் பங்கேற்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வலுவடைந்து வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்ட பயனாளிகளிடமிருந்து அவர்களின் வாழ்வில் இத்திட்டத்தின் நேர்மறையான தாக்கத்தைப் படம்பிடிக்கும் சான்றுகளைக் கொண்ட ஒரு நிமிட காணொலியின் மூலம், மிகவும் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் மக்களுக்கு சேவை செய்ய பாடுபடும் தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான இந்த சிறந்த வாய்ப்பிற்காக எனது மனமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் உரையாற்றினார்.

---

விருதுநகர் மாவட்டம் – சிவகாசி – காளையார்குறிச்சி – தனியார்

# பட்டாசு ஆலையில் விபத்து: உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை , ஜூலை 10-**

**விருதுநகர் மாவட்டம், சிவகாசி, காளையார்குறிச்சி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று (09-07-2024) காலை 09.15 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெள்ளூர், சிதம்பராபுரத்தைச் சேர்ந்த மாரியப்பன் (வயது 45) (த/பெ.பெருமாள்) மற்றும் முத்துமுருகன் (வயது 45) (த/பெ.பரமசிவம்) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் எம். புதுப்பட்டியைச் சேர்ந்த சங்கரவேல் (வயது 52) (த/பெ.கூடலிங்கம்) மற்றும் திருமதி.சரோஜா (வயது 50) (க/பெ. கொடக்காரசின்னு) ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

தாம்பரம் காவல் ஆணையர் உள்ளிட்ட

# 18 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜூலை 10-

தாம்பரம் காவல் ஆணையர் அமல்ராஜ் உள்ளிட்ட 18 ஐ.பி.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசின் உள்துறை செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, தாம்பரம் காவல் ஆணையராக இருந்த அமல்ராஜ் சி.ஐ.டி. அமலாக்கப்பிரிவு ஏ.டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநில குற்ற ஆவணக் காப்பக ஏ.டி.ஜி.பி.யாக இருந்த அபின் தினேஷ் மொடக் தாம்பரம் காவல் ஆணையராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி.யாக இருந்த ஜெயராமன் மாநில குற்ற ஆவணக் காப்பக ஏ.டி.ஜி.பி.யாகவும், சி.பி.சி.ஐ.டி, ஏ.டி.ஜி.பி. வெங்கட்ராமன், காவல்துறை நிர்வாக பிரிவு ஏ.டி.ஜி.பி.யாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மகேஷ்குமார் அகர்வால் ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி.-யாகவும், வினித்தேவ் வான்கடே, காவல்துறை தலைமையக ஏ.டி.ஜி.பி.-யாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சி.பி.சி.ஐ.டி, ஐ.ஜி. அன்பு, அத்துறையின் ஏ.டி.ஜி.பி. பொறுப்பை கூடுதலாக கவனிப்பார். சைபர் கிரைம் பிரிவு ஏ.டி.ஜி.பி. சஞ்சய் குமார், கடலோர பாதுகாப்பு பிரிவு ஏ.டி.ஜி.பி.யாகவும், கடலோர பாதுகாப்பு பிரிவு ஏ.டி.ஜி.பி. சந்தீப் மிட்டல், சைபர் கிரைம் பிரிவு ஏ.டி.ஜி.பி.யாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு டி.ஜி.பி.யாக ராஜீவ் குமாருவும், தொழில் நுட்பப் பிரிவு ஏ.டி.ஜி.பி.யாக தமிழ் சந்திரனும் மாற்றப்பட்டுள்ளனர். பிரேம் ஆனந்த் சின்ஹா தெற்கு மண்டல ஐ.ஜி.யாகவும், கண்ணன், சென்னை மாநகர தெற்கு கூடுதல் ஆணையராகவும், அஸ்ரா கார்க், வடக்கு மண்டல ஐ.ஜி.யாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். நரேந்திரன் நாயர், சென்னை மாநகர வடக்கு கூடுதல் ஆணையராகவும், பிரவின் குமார் அபிநபு சேலம் மாநகர காவல் ஆணையராகவும், விஜயகுமாரி சென்னை ஆயுதப்படை ஐ.ஜி.யாகவும், லட்சுமி, திருப்பூர் நகர காவல் ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!



காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கழக வேட்பாளர் க.செல்வம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர், காஞ்சிபுரம், செய்யூர் சட்டமன்ற தொகுதியில் மாநகரம், ஒன்றிய பேரூர், வாரியாக ஊர் ஊராக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | மாநகரம் / ஒன்றியம் / பேரூர் |
|---|---|---|
| 13-07-2024 சனி | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி<br>மாலை 4.30 மணி | வாலாஜாபாத் (தெ)<br>காஞ்சிபுரம் (தெ)<br>வாலாஜாபாத் பேரூர் |
| 14-07-2024 ஞாயிறு | காலை 7.00 மணி<br>பிற்பகல் 1.00 மணி | சாலவாக்கம் ஒன்றியம்<br>உத்திரமேரூர் ஒன்றியம் |
| 15-07-2024 திங்கள் | காலை 7.00 மணி | காஞ்சிபுரம் மாநகரம் |
| 16-07-2024 செவ்வாய் | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி | காஞ்சிபுரம் மாநகரம்<br>உத்திரமேரூர் பேரூர் |
| 17-07-2024 புதன் | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி | காஞ்சிபுரம் (வ)<br>வாலாஜாபாத் (வ) |
| 18-07-2024 வியாழன் | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி | சித்தாமூர் (மே)<br>சித்தாமூர் (கிழ) |
| 19-07-2024 வெள்ளி | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி | லத்தூர் (வ)<br>லத்தூர் (தெ) |
| 20-07-2024 சனி | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி | திருக்கழுக்குன்றம் (தெ)<br>இடைக்கழிநாடு பேரூர் |

எனவே சம்பந்தப்பட்ட மாநகரம் / ஒன்றிய / பேரூர் செயலாளர்கள், தொகுதிக்கு உட்பட்ட இந்திய கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு முறையாக தகவல்கள் தெரிவித்து அந்தந்தப்பகுதியில் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

---

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! தியாகராயர் நகர் மேற்கு பகுதிப் பிரதிநிதி

# புலியூர் ஒய்.எட்வின் - எஸ்தர் இல்ல மண விழா!

## மயிலை த.வேலு – நே.சிற்றரசு – தமிழச்சி தங்கபாண்டியன் – எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 10

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்குப் பகுதிப் பிரதிநிதி புலியூர் ஒய்.எட்வின் - இ.எஸ்தர் தம்பதியரின் இளைய மகனும், சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எ.அஸ்வின் குமாரின் சகோதரருமான இ.காட்வினுக்கும், சென்னை கோயம்பேடு உதயகுமார் - மோகனா ஆகியோரின் மகள் பிரியதர்ஷினிக்கும் திருமணம் இன்று (10.7.2024, புதன்கிழமை) காலை 7.30 மணிக்கு கோடம்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் சாலை-அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இன்று மாலை 7.30 மணியளவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை ஏற்கிறார்.

கே.எஸ்.வெல்டிங் மணி, கே.ஏழுமலை எம்.சி., ஐ.கென்னடி, நா.இராம லிங்கம் எம்.சி., கோடம்பாக்கம் மு.சத்யா, ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நமோ முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, கார்த்திகா பாஸ்கர் எம்.சி., புலியூர் டி.மோசஸ், எஸ்.உமாசங்கர், புலியூர் மு.லோகு, புலியூர் மு.அப்பேன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ். மோகன், சென்னை மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் - விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் கே.சு.மணி, மாம்பலம் அ.சந்திரசேகர், நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, சைதை எம்.கிருஷ்ண மூர்த்தி எம்.சி., ச.தேவராசு, வாட்டர் ஆ.வாசுதேவன், ஜெ.ஜானகி ராமன், எம்.ஆறுமுகம், முகப்பேர் கே. குமரேசன், எஸ்.பாலசுப்பிரமணியம், மோனிசா கருணாநிதி, திருவொற்றியூர் ஆர்.டி.மதன், பா.பிரகாஷ், சி.ஐ.டி. நகர் குமரன், என்.ராமகிருஷ்ணன், க.சந்துரு, எஸ்.பாஸ்கர் எம்.சி., ப.சாந்தி, மு.மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி. பி.எஸ்.ஜெனார்த்தா, எஸ். புஸ்பா, கோமதி மணிவண்ணன், டான்டி சி.பிரகாஷ், த.விக்னேஷ்வரன், தினேஷ் மாணிக்கம், தி.நகர் கே.ஹரி, பா.முரளி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

---

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்க நிகழ்ச்சி குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்

மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் வருகின்ற 12.07.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் கடம்பத்தூர் ஒன்றியம் மப்பேடு கூட்டுசாலையில் உள்ள பிருந்தாவன் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ். ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா. உதயமலர்பாண்டியன், எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம் வி. கிஷோர், மு.சுப்பிரமணியம் பி.ராஜேஸ்வரிரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்தில் முன்னதாக கடம்பத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மோ.ரமேஷ் வரவேற்புரைஆற்றுகிறார். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் கீழச்சேரி பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுச்சி மிகு வரவேற்பு அளிப்பது குறித்து மற்றும் கழக வளர்ச்சி குறித்து.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

சென்னை மேற்கு மாவட்ட

# மகளிரணி அமைப்பாளர் யோகேஸ்வரியின் தந்தை சுந்தரேசன் நினைவு போற்றும் நிகழ்ச்சி!

## நே.சிற்றரசு - எம்.கே.மோகன் - நா.எழிலன் பங்கேற்பு



சென்னை, ஜூலை 10 -

சென்னை மேற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி. யோகேஸ்வரி சுந்தரராசனின் தந்தை சி. சுந்தரேசன் அவர்கள், கடந்த 26.6.2024 அன்று இயற்கை எய்தினார்.

அன்னாரின் நினைவு போற்றும் நிகழ்ச்சி இன்று (10.7.2024 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் எண். 10/ 27, ரங்கராஜலு தெரு, அய்யாவு காலனி, அமைந்தகரை, சென்னை - 29 - எனும் முகவரியில் உள்ள யோகேஸ்வரி சுந்தரேசனின் இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம் எம்.சி., ச.பரமசிவம், மா.பா.அன்புதுரை, ஏ.ஆர்.பி.எம்.காமராஜன், எஸ்.மதன்மோகன், எம்.கே.வினோத் வேலாயுதம், மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக, அனைத்து அணிகளின், நிர்வாகிகள் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நினைவு அஞ்சலி செலுத்துகின்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. அம்பிகா
### ஜூலை 10 (2017)



**கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.**

**2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**